*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# திருமந்திரத்தில் கல்வி சிந்தனைகள்

**முனைவர் ப. அனுசுயா**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
நேரு நினைவுக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

## முன்னுரை

*திருமந்திரம் சைவ சமயத்தின் புகழ்பெற்ற தோத்திர நூல்களான பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக விளங்குகிறது. திருமூலர் எழுதிய தோத்திர நூலான திருமந்திரத்தில் வெளிப்படும் கல்வியியல் குறித்த செய்திகளை விளக்கிக் காட்டுவது இப்பகுதியில் நோக்கமாகும்.*

**கல்வியின் இன்றியமையாமை**

"கல்வி" என்பது அறிவு, நல்லொழுக்கம், நுட்பத் தகைமை என்பனவற்றைக் கற்றலையும் கற்பித்தலையும் குறிக்கும். கல்வி மனிதருக்கு பரந்துபட்ட அறிவை வழங்கிச் சிந்தனையைத் தூண்டும். கல்விச்செல்வம் ஒன்று மட்டுமே நிலையான புகழினைத் தரும். பண்டைய காலத்தில் கல்வி என்பது சமயச் சார்பாக இருந்தது. சமயத்தினைத் தழுவிய அக்காலக் கல்வி வளர்க்கப்பட்டது. கல்வி கற்றலைத் திருமூலர் சமயத்துடன் இணைத்துக் கண்டுள்ளார். கல்வி என்பது தத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல் என்ற நிலையில் இருந்தது. "தத்துவம் புரிதல்" என்ற இந்த நிலையில் "சிவ அனுபவத்தினை பெறுவதே கல்வி" என்ற கருத்தினை உடையவராகத் திருமூலர் உள்ளார்..

திருமந்திரத்தில் கல்வி சிந்தனைகள்

இறைவன் உயிர்களின் வினைக்கேற்பப் பிறப்பிக்கின்றான். அவ்வாறு பிறந்த உயிர்தன் அருளை நாடி உய்ய நினைக்கின்றது. எனவே உயிர்களின் உள்ளத்துள் நிலைத்து நிற்கும் கல்வியே உண்மையான கல்வி என்பதனை,

***"குறிப்பறிந் தேன் உடலோடுயிர் கூடிச்***
***செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை***
***மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்***
***கறிப்பறி யாமிகுங் கல்வி கற்றேனே"***
***(திருமந்திரம்.290)***

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன. இப்பாடலில் மாசில்லாத உயர்ந்த கல்வியை யான் கற்றேன். அதனால் உயிர் உடலோடு கூடி நின்று அறியத்தக்க பொருளை அறிந்தேன். அதன் பயனாக இறைவனை உள்ளத்திலே வைத்து வணங்கினேன். அதனால் மீண்டு போகாதவனாய் என் உள்ளத்திலே புகுந்து நின்றான் என்று திருமூலர் பதிவு செய்துள்ளார்.

நிலையான செல்வம் (கல்வி) ஞானம். அதனை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பொருட் செல்வத்தினைத் தேடித் தருகின்ற கல்வியைக் கற்க வேண்டும். அச்செல்வத்தினைப் பெற்ற பின் மேலும் கற்க வேண்டும் என்னும் ஆர்வத்தினை ஏற்படுத்தாது. உடலுக்கும் உயிருக்கும் மேன்மை தருகின்ற கல்வி ஊனில் கலந்து உயிரில் கலக்கும் கல்வி

எல்லாக் காலத்திற்கும் பயன்படும் என்பதை வள்ளுவர்,

***"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு***
***எழுமையும் ஏமாப்பு உடைத்து"***
***(குறள் 398)***

என்று குறிப்பிட்டுள்ளார்.

உயிர்களுக்குக் கண் இன்றியமையாதது. உயிரின் ஒளி கண் வழியே உலாவி உலக வாழ்வினை நடத்தி உயிரை விட உயர்வாக எண்ணி எல்லா வழியும் எல்லோருக்கும் உரியவை என்று புகழ்ந்து போற்றி வருகின்றனர். இது புறக்கண்ணால் மானிடர் அடையும் சிறப்பாகும். அக்கண் பெறும்போது புறக்கண் மேன்மேலும் ஒளி பெறுகின்றது. அக்கண்ணை அளிப்பது கல்வியாகும். இதனைத் திருமந்திரம்,

***கற்றறி வாளர் கருதிய காலத்துக்***
***கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு***
***கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்***
***கற்றறி காட்டக் கயலுள வாக்குமே"***
***(திருமந்திரம்.291)***

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன. இப்பாடலில் கல்வியைக் கற்ற சான்றோர்கள் எல்லோருக்கும் நற்பண்புகளைப் புகட்டி நல்விழி படுத்துவார்கள். நல்லோரின் அறிவுரைகள் பாலை நிலத்திலே கயல் மீனைப் பிறழச் செய்தாற் போல நன்மையை பயக்கும் என்கிறார் திருமூலர். மேலம் தமது அகக்கண்களால் கல்வியைக் கண்டு அதன் மேன்மை இவ்வுலகிற்கு இஃதென எடுத்துரைத்துள்ளார்.

கற்றவர் நெறி

கல்வியைக் கற்றவர் கற்றவழி நிற்க வேண்டும் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் ஒரு சேர எடுத்துரைக்கின்றன. திருமூலரும் தமது பாடலில் கற்றவர் தாம் கற்ற பொருளை உய்த்துணர்ந்து அதன் வழி நிற்க வேண்டும் என்று கற்றவர் கைக்கொள்ள வேண்டிய நெறியாக விளக்கம் தருகிறார்.

***"நிலையுடையான் கழலைக் கற்கின்றது செய்மின்" (தி.மந்திரம் 292)***
***"ஆய்ந்து கொள்வார்க்கரன் அங்கே வெளிப்படும்" (தி. மந்திரம் 292)***

என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

கல்வியின் உண்மையை அறிந்து அறிவில் முதிர்ச்சி பெற்றவர்க்கு ஞானக்கண் ஒன்று தோற்றம் தரும். அவ்வாறு ஞானக் கண் பெற்றவர்கள் மற்றவர்களுக்கு சில அனுபவத்தினைக் கற்றுத் தருவதே கல்வி. இக்கருத்தை

***"கண் இரண்டே யாவர்க்கும்***
***கற்றோர்க்கு மூன்றே விழி"***

என்று நீதி நூல் குறிப்பிட்டுள்ளன. ஞானம் பெற்றவர் தனக்காக வாழாமல் பிறருக்காக பிறர் வாழ்க்கையையும் செம்மைப் படுத்துவர்.

முயற்சியின் பயனாக கிடைத்த கல்வியை விட கேள்வி ஞானத்தால் கிடைக்கின்ற பயன் சிறப்புடையது. எழுத்தறிவில்லாதவர்களுக்குக் கேள்வி அறிவு மட்டுமே உரியது. அவர்கள் சான்றோர்களின் சொற்பொழிவினைக் கேட்டு வாழ்க்கையில் எதையும் எழுதி வைக்காமல் அறிவால் அறிந்து சொல்லாடல் வழியாக வெளிப்படுத்துவர். திருமூலர் சிவனின் பெருமைகளை, தத்துவங்களை கேள்விஞானம் எனக் கூறினாலும் கற்றவருக்கு கேள்வியறிவு இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி ஞானத்தால் இறைவனை உணர்ந்தவர்கள் தேவர்க்குச் சமமானவர்கள். இறைவனைப் பற்றி ஞானம் பெற்றவர்களுக்கு மனிதனுக்கு உண்டாகும் பிறப்பு இறப்பு நீங்கும்.

இறைவனின் திருவடிகளைப் பிடிப்பதற்குப் பிறப்பு என்பது அடித்தளம். இப்பிறப்பில் உடம்புக்குத் துணை நிற்பது உயிராகும். அவ்வுயிருக்கும் துணை கேள்வியால் வரும் ஞானமே. அதனால் ஆணவம் கண்மம், மாயை நீங்கும். கேள்வி ஞானத்தின் பயனை

***"உறுதுணை யாவது உயிரும் உடம்பும்***
***உறுதுணை யாவது உலகுறு கேள்வி***
***செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை***
***பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே"***
***(தி.மந்திரம். 307)***

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. சிவ தத்துவத்தினைக் கேட்கும் நல்ல கேள்வியறிவு உயிர்க்கு உறுதுணையாகும். இப்பாடலில் சிவத்தோடு கேள்வியறிவை பொருத்துப் பார்க்கிறார்.

**கல்லாமை**

கல்வி கேள்வி வாயிலாக அறிந்தும் உண்மை அனுபவம் பெறாதவர் கல்லாதவர் எனும் கருத்திற்கேற்ப திருமூலர் அனைத்து உயிரினும் அனைத்து இடத்திலும் உள்ளான் எனினும் கல்லாதவர் அவனைக் காணஇயலாது என்பதை உணர்ந்து கல்லாதவர்களை கயவர், மூடர், மதியிலார் என்று சுட்டியுள்ளார்.

கல்லாமையை இல்லாமல் ஆக்கினால் மனித குலம் மேன்மையுறும். திருமூலர் சிவ அனுபவத்தைக் கற்காமல் இருப்பதையே கல்லாமை என்கிறார். சிவஞானக் கல்வி இல்லாதவர்கள் மனத்தினைச் சிதறவிட்டு அழிவைத் தேடிக்கொள்வார்கள். திருமூலர் சிவனின் திருவைந்தெழுத்தையும் திருமுறைகளையும் கற்காதவர்களே கல்லாதவர்கள் என்றாலும் கல்வியறிவு பெறாதாருக்குரிய வாழ்வியல் இன்னல்களையும் சுட்டுகிறார்.

இறைவன் வேறுபாடு இல்லாதவர் கற்றவர்கள். சிவனை அறிவால் உணர்ந்து மகிழ்வார்கள். கல்லாதவர்கள் உலகியலறிவு பெற்றிருப்பினும் அறிவால் உணர்ந்து மகிழும் திருவடி இன்பம் பெற இயலாது. இதனை,

***"கல்லா தவரும் கருத்தறி காட்சியை***
***வல்லார் எனில் அருட் கண்ணான் மதித்துளோர்***
***கல்லாதவார் உண்மைபற் றாநிற்ப கற்றோரும்***
***கல்லாதார் இன்பம் காணுகிலாரே"***

***(தி.மந்திரம். 415)***

என்ற பாடல் விளக்குகின்றன.

கல்லாதவர்கள் உயிரே நிலையானது என்று கருதுவர். இவர்கள் இறைவனை வணங்கும் முறையை அறியாதவர்கள். கற்றவர்கள் சிவஞானம் பெற்று உயிர் நிலையானது அல்ல என்பதை உணர்ந்து அறமும் தவமும் செய்து முக்தியடைகின்றனர். கல்லாதவர்கள் வினை காரணமாகப் பிறவி துன்பத்தில் வருந்துகின்றனர்.

***"கல்லாத மூடரைக் காணவும் ஆகாது***
***கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன் அன்று***
***கல்லாத மூடர்க்குக் கல்லாதவர் நல்லவராம்***
***கல்லாத மூடர் கருத்தறியாதே"***

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன.

கல்வியறிவு இல்லாதவர் பிறர்க்கு அறிவு புகட்ட முயற்சி செய்வது, பெண் தன்மையற்ற திருநங்கைகள் காதல் வேட்கை, கொள்வது போல என்பதை,

***"கல்லாதான் சொல்கா முறுதல் முலையிரண்டும்***
***இல்லாதான் பெண்காமுற்று அற்று"***

***(தி.மந்திரம்.351)***

என்ற குறட்பா குறிப்பிட்டுள்ளது. கல்வியைக் கற்று இறைவனை வணங்கி ஜோதியாக இறைவன் உள்ளத்தில் தோன்றுவான். உண்மைக் கல்வி கற்றவர் பாவங்களில் இருந்து நீக்குகின்றனர். அவர்கள் உடல் இரசவாதம் செய்யப்பெற்ற பொன் போல அழியாத தன்மை பெறும், உண்மைக்கல்வி கற்றவர் பாவங்களில் இருந்து நீங்குகின்றனர்" எனவே கல்வியின் பயனைப் பற்றி

***"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு***
***மாடல்ல மற்ற யவை"***

***(குறள். 400)***

என்ற குறட்பா குறிப்பிட்டுள்ளது. எனவே வாழ்க்கை நன்னெறியில் செல்ல கல்வி இன்றியமையாதது என்று திருமூலர் சுட்டியுள்ளார்.

**முடிவுகள்**

சமுதாயம் உயர்ந்தோரைப் பின்பற்றி வந்துள்ளது. பண்டைக்காலத்தில் கல்வி என்பது சமயச் சார்புடையதாக விளங்கி வந்தது. திருமூலர் உயிர்களின் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் கல்வியே சிறந்தது என்று உரைத்துள்ளார்.

உண்மையான ஞானம் என்பது கல்வியோடு கூடிய வேள்வி ஞானமாகும். கேள்வி ஞானத்தால் இறைவனை உணர்ந்தவர்கள் தேவர்களுக்கு சமமாகக் கருதப்படுவர்.

சிவானுபவத்தின் கிட்டும் கல்வி உயிருக்கு வழியும் உறுதியும் அறிவுக்கு உரமும் உண்டாக்க வல்லது.

கல்வி கற்றவரின் உள்ளம் கடவுள் உறையும் இல்லமாகத் திகழும் தன்மையை பதிவிட்டுள்ளார்.